1990 ஏப்ரல் 19]

திரு. பி. காளியப்பன் : அவைத் தலைவரவர்களே, இப்போது பறக்கும் படை என்ற ஒன்று கூட்டுறவுச் சங்கங்களிலே திடீரென்று புகுந்து, ஒழுங்காக விற்பனை செய்யும் விற்பனையாளர்களை ஒழுங்காகப் பணி செய்யவிடாமல் செய்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பறக்கும் படையின் புனிதமான நோக்கத்தை சிதறடிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எங்கேயாவது ஒழுங்கீனங்கள் தென்பட்டால், அந்த ஒழுங்கீனங்களை அப்புறப்படுத்தவும், அந்த ஒழுங்கீனங்களோடு தொடர்புடையவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும்தான் பறக்கும் படை அமைக்கப்பட்டிருக்கிறது. எங்காவது ஒட்டன்சத்திரம் பகுதியில் பறக்கும் படை தவறாக நடந்திருக்குமானால், குறிப்பிட்ட பறக்கும் படை பற்றிய விவரங்களை எனக்குத் தெரிவித்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு வழங்குதல்.

*3767. திரு. எம். முகமது சித்திக் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு வழங்கப்படுமா ?

9-50 மணி.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சத்துணவுக் கூடங்களில் உணவு உண்ணும் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு வழங்கப்படுகிற பரிசீலனை இப்போது இல்லை.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எவர்சில்வர் தட்டு சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு வழங்கப்படுவதால் அதிக செலவாகாது. ஏறத்தாழ அலுமினியத் தட்டுக்கும் எவர்சில்வர் தட்டுக்கும் சற்றேதான் விலை வித்தியாசம் உள்ளது. மேலும் அலுமினியம் என்ற விஷத் தன்மை அந்தத் தட்டில் ஏற்படுவதாகக் கூறுகிறார்கள். அந்தத் தட்டில் தொடர்ந்து உண்ணுவதால் அந்த விஷத் தன்மையால் அந்தக் குழந்தைகளுக்கு உடல் நலம் பாதிக்கக்கூடிய சூழ்நிலையும்

இருக்கின்றது. ஆகவே அதுபோன்ற அலுமினியத் தட்டுக்களை நீக்கிவிட்டு எவர்சில்வர் தட்டுக்களை வழங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா அலுமினியப் பாத்திரங்களும் விஷத் தன்மை கொண்டதல்ல. அப்படி விஷத் தன்மை கொண்டதாக இருந்தால் மொத்த ஜனத்தொகையில் மூன்றிலே ஒரு பங்கு இந்நேரம் மடிந்து இருக்க வேண்டும். அந்த அளவிற்கு கிராமங்களில் மக்கள் இன்னும் அலுமினியப் பாத்திரங்களைத் தான் பயன்படுத்தி வருகிறார்கள். அது நல்ல முறையில் சுத்தம் செய்யப்பட்டு உலர வைக்கப்பட வேண்டும். ஈரத்தோடு வைத்தால் அதிலே சில கெடுதிகள் ஏற்படும் என்பதால் அது உலர வைக்கப்பட வேண்டும். அந்த வழிமுறைகள் எல்லாம் இப்போது சத்துணவுக் கூடங்களில் பணியாளர்களுக்குக் கற்றுத் தரப்பட்டிருக்கிறது. சத்துணவுக் கூடங்களில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டுக்களை வழங்க வேண்டுமென்றால் இந்த அரசுக்குக் கூடுதலாக 5 கோடி ரூபாய் செலவாகுமென்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. எனவே அரசு நிதிநிலையைக் கருத்திலே கொண்டு மாண்புமிகு சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் அவரவர்கள் தொகுதியிலே இருக்கக்கூடிய தொண்டு நிறுவனங்கள், பெரிய பெரிய தொழில் அதிபர்கள், நன்கொடையாளர்களை அணுகி அவர்களின் மூலமாக அந்தக் கூடங்களுக்கு எவர்சில்வர் தட்டுகளை வழங்குகிற முயற்சியை மேற்கொள்வீர்களேயானால் அரசு அதை பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அவருடைய முயற்சியில் வெள்ளித் தட்டே கூட வழங்கலாம்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய யோசனை மிகவும் சிறப்பானது. அத்தகைய முயற்சிகளை நிச்சயமாக நான் எடுத்துக் கொள்வேன். எவர்சில்வர் தட்டுகளை சமூக சங்கங்கள் வழங்க முன்வந்தால் அலுமினியத் தட்டுக்கான தொகையை அந்தச் சங்கங்களுக்குக் கொடுத்து, மீதித் தொகையை அவர்கள் ஏற்றுக் கொள்ள அரசு ஏற்பாடு செய்யுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஏற்கனவே பயன்படுத்திய அலுமினியத் தட்டை வேண்டுமானால் அப்படியே கொடுத்துவிட்டு மாற்றிக்கொள்ளலாம்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆலோசனையை வேண்டுமானால் கருத்திலே எடுத்துக் கொள்ளலாம்.